


தனி பிரதி
ரூ.10/-

Single Copy
Rs.10/-

ANNUAL SUBSCRIPTION
Rs.120/-




# பொறியியல் கதிர்
# PORIYIYAL KADHIR

TAMIL & ENGLISH MONTHLY



| | | | |
|---|---|---|---|
| கதிர் 57 | பாரிப்பு 5 | திருவள்ளுவர் ஆண்டு 2057 | மே - 2026 |
| KADHIR 57 | PAARIPPU 5 | THIRUVALLUVAR AANDU 2057 | MAY - 2026 |



## நெஞ்சம் நிறைந்து வாழ்த்தி வரவேற்கிறோம்



முதலமைச்சராக பொறுப்பேற்று, நல்லாட்சி தரவிருக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு C.ஜோசப் விஜய் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.


நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

தமிழ்நாடு பொறியியல் சங்கம்
பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org    email id : tneapwd@yahoo.co.in

**பொதுப்பணித்துறை மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு ஆதவ் அர்ஜுனா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.**



**பொதுச்செயலாளர் மடல்**

**மடல் - 5 (2025 - 2026)**



## தொடரும்
## நம் பயணம் .......

### அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

நடந்து முடிந்த 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் அமோக வெற்றி பெற்று தமிழக முதல்வராக பொறுப்பேற்று இருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாரம்பரியமிக்க தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

முதலமைச்சராக பொறுப்பேற்ற உடன் தனது உரையில் வெளிப்படையாகவும் மற்றும் நேர்மையாகவும் ஆட்சி நடைபெறும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். அவர் சுட்டிக்காட்டியது போல நமது சங்க உறுப்பினர்களின் குறைகள் விரைவில் தீர்க்கப்படும் என்று நம்பிக்கை நமக்கு கிடைக்கிறது.

பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறையில் பணிபுரிந்து கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் 2026 ஆம் மாதம் ஓய்வு பெற்ற பொறியாளர்கள் மற்றும் மே 2026 ஆம் மாதம் ஓய்வு பெற இருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தை சார்ந்த பொறியாளர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர்வளத்துறையில் 10 ஆண்டுகள் பணிமுடிக்கப்பெற்ற இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்குவதற்கு ஏதுவாக மதிப்பிற்குரிய முதன்மைத் தலைமை பொறியாளர் அவர்களால் அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்திற்கு அரசிடமிருந்து தீர்வு கிடைக்கப்பெற்ற பின் பதவி உயர்வு கிடைக்கும் என எதிர்பாக்கப்படுகிறது.

நீர்வளத்துறையில் முதுநிலையில் உள்ள பணிபுரியும் மற்றும் பணி ஓய்வு பெற்ற உதவி செயற்பொறியாளர்களுக்கு "Special" செயற்பொறியாளராக தரம் உயர்த்துவதற்குரிய கோப்பு மதிப்பிற்குரிய நீர்வளத்துறை முதன்மைத் தலைமை பொறியாளர் அவர்கள் பரிந்துரைத்து கோப்பு அரசின் பரிசீலினையில் உள்ளது.

வருகிற ஜீன் மாதம் மூன்றாம் வார இறுதியில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் செயற்குழு கூட்டம் மதுரையில் நடைபெற உள்ளது. அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை இல்லம் கட்டடத்திற்கு புதியதாக வர்ணம்பூசி புனரமைப்பு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் இல்ல கட்டடத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**

**வளர்க பொறியாளர்களின் ஒற்றுமை**

**வாழ்க வையகம், வாழ்க வளத்துடன்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம்.

**(சி. பன்னீர்செல்வம்)**
**பொதுச் செயலாளர்**

**Er.C. PANNEERSELVAM, General Secretary**
**Cell Nos.** **94436 15580** / **96006 62435**
**E.mail: panneerselvamcps@gmail.com**

## உறுப்பினர்கள் மற்றும் கிளைப் பொறுப்பாளர்கள் கவனத்திற்கு

கிளைப் பொறுப்பாளர்கள் தங்கள் கிளைகளில் உள்ள ஓய்வு பெற்ற உறுப்பினர்களிடமிருந்து மூலச் சான்றிதழ்கள் கிடைக்கப் பெறாவிட்டால் கீழ்க்கண்ட சான்றினை பத்து ரூபாய் கோர்ட் வில்லை (Court Stamp) தாளில் உறுப்பினர் கையொப்பம் பெற்று விண்ணப்ப படிவம் மற்றும் முன் ஒப்புகை சான்றுடன் மையச் சங்கத்திற்கு அனுப்ப வேண்டுகிறேன்.

"எனக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தால் வழங்கப்பட்ட பொங்கும் நிதி முதல் கட்டம் எண் ——— இரண்டாம் கட்டம் அ/ஆ எண் ............... எங்கோ கை தவறுதலாக வைத்து விட்டேன்.

நான் ..............................................- ல் ஓய்வு பெற்றேன். தற்பொழுது தேடிய பொழுது எனது சான்றிதழ் கிடைக்கப் பெறவில்லை. பின்னர் கிடைத்தால் அவைகளை சங்கத்திற்கு அனுப்பி வைக்கின்றேன். அப்பொழுது அது தொடர்பாக எவ்வித தொகையும் கோர மாட்டேன். எனவே, எனது இந்த உறுதி மொழியை ஏற்று பொங்கும் நிதி விதிகளின் படி உரிய தொகையை எனக்கு அளிக்க கோருகிறேன்.

X..............................

உறுப்பினர் கையொப்பம்

## ABSTRACT

Fundamental Rules- Rule 101(a) - Maternity Leave - Grand of maternity leave to the married women Government Servants for more than two children- Amendment- Orders- Issued.

**HUMAN RESOURCES MANAGEMENT (FR-III) DEPARTMENT**

**G.O. Ms.No.18** **Dated : 13.03.2026**
**விசுவாவசு வருடம், மாசி-29**
**திருவள்ளுவர் ஆண்டு - 2057.**

**Read:**

1. G.O.Ms.No.237, Personnel and Administrative Reforms (FR.III) Department, dated 29.06.1993.
2. G.O.Ms.No.173, Personnel and Administrative Reforms (FR.IV) Department, dated 27.06.1997.
3. Orders of the Hon’ble Supreme Court of India dated 23.05.2025 in Special Leave Petition (Civil) No. 20178 of 2022.
4. Orders of the Hon’ble High Court of Madras dated 21.01.2026 in W.P.No. 705 of 2026.

**ORDER**:

In the Government first read above, orders were issued prescribing the two surviving children norms for granting of maternity leave to the married women Government Servants. Accordingly, necessary amendments to the rule 101(a) of the Fundamental Rules have been made in the Government Order second read above.

2. In various Writ Petitions filed by the women Government servants seeking Maternity leave for their third child, before the Hon’ble High Court, the Court has disposed of those cases with the direction to grand the maternity leave for their third confinement/ delivery, based on the observations of the Hon’ble Supreme Court of India in the order third read above.

3. The Hon’ble Supreme Court of India in its order dated 23.05.2025 in Special Leave Petition (Civil) No. 20178 of 2022 has observed as follows:

*“19. A careful perusal of the above provision would reveal that grant of maternity benefit per se not denied to a woman employee having more than two children. Following amendment in the year 2017, a restriction has been introduced in Section 5 by inserting a proviso under sub- section (3) as to the entitlement of the period of maternity leave. A woman employee having less than two surviving children is*

*entitles to a maximum period of benefit i.e.26 weeks and for a woman employee having two or more than two surviving children, the benefit is restricted to 12 weeks. Thus, there is no ceiling or cap on the number of children to claim maternity benefit. Only thing is that in case of a woman employee having two or more than two surviving children seeking maternity leave, period of the benefit is reduced: from a maximum period of 26 weeks to a maximum of 12 weeks."*

4. Based on the observation made by the Hon'ble Supreme Court of India, it is clear that the restriction of grand of maternity leave to women employees is violative of Article 21 of the Constitution of India and entitlement of maternity benefits without restricting the number of children, by the women employees are recognized by the various international treaties and Conventions. Further , the Apex Court in the aforesaid decision has also highlighted the provisions contained in the proviso to sub-section (3) of section 5 of the Maternity Benefit Act, 1961 (Central Act 53 of 1961) as to the entitlement of the period of maternity benefit which provides that, a woman employee having less than two surviving children is entitled to a maximum period of benefits i.e. 26 weeks and for a woman employee having two or more than two surviving children, the benefit is restricted to 12 weeks and thus the Supreme Court has observed that in the said provision, there is no ceiling or cap on the number of children to claim maternity benefit.

5. The first proviso to sub- section (3) of the section 5 of the said Central Act provides as follows:-

*Provided that the maximum period entitled to maternity benefit by a woman having two or more than two surviving children shall be twelve weeks of which not more than six weeks shall precede the date of her expected delivery :*

6. After careful consideration of the above observations made by the Supreme Court of India in the order third read above and the provisions under the Maternity Benefits Act, 1961, the Government have decided to grant maternity leave to the women Government Servant having two or more that two surviving children and make suitable amendments to this effect in the Fundamental Rules of the Government of Tamil Nadu, 1922.

7. Accordingly, the following Notification shall be published in the Tamil Nadu Government Gazette Extraordinary dated 13.03.2026:-

**NOTIFICATION**

In exercise of the powers conferred by the proviso to Article 309, read with Article 313 of the Constitution of India and of all other powers hereunto enabling, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Fundamental Rules:-

**AMENDMENTS**

In the said Rules, in rule 101, under the heading 'Instructions under Rule

101 (a) – Maternity Leave',in instruction 1, for the first and second provisos, the following provisos shall be substituted, namely:-

"Provided that the maternity leave for a period not exceeding 365 days referred in clauses (i) and (ii) above shall be granted to a married woman Government servant having less that two surviving children:

Provided further that in the case of a married woman Government servant having two surviving children born as twins in the first delivery, maternity leave shall be granted for a period not exceeding 365 days for one more delivery:

Provided also that in the case of a married woman Government servant having two or more than two surviving children, maternity leave on full pay for a period not exceeding twelve weeks, which may spread over from the pre-confinement rest to post confinement recuperation at the option of the Government Servant".

**(BY ORDER OF THE GOVERNOR)**

**N. MURUGANANDAM**
**CHIEF SECRETARY TO GOVERNMENT**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 206, நீர்வளத் (D2) துறை நாள் 30.03.2026)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | P. ஆறுமுகம் | சிறப்பு தலைமைப் பொறியாளர் |
| 2. | K. சின்னத்துரை | உதவி செயற்பொறியாளர் |
| 3. | S. சிவராஜன் | உதவி செயற்பொறியாளர் |
| 4. | P. பார்த்திபன் | உதவி செயற்பொறியாளர் |
| 5. | S. ராஜதிலகா | உதவி செயற்பொறியாளர் |
| 6. | M.B. தங்க ஜெய்லானி | உதவி செயற்பொறியாளர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

J. ஜெயகாந்தன்
அரசு செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 65, பொதுப்பணித் (Estt-1-2) துறை நாள் 30.03.2026)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | T. முரளி | உதவி செயற்பொறியாளர் |
| 2. | D. வேலாயுதன் | தலைமை வரைதொழில் அலுவலர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

தமிழ்நாடு அரசு
2026

கையெழுத்துத் தொடர்

**நிதி(படிகள்)துறை**

**அரசாணை(நிலை) எண்.97, நாள்: 14.05.2026.**

(சித்திரை -31, திருவள்ளுவர் ஆண்டு 2057)

**சுருக்கம்**

**படிகள்** - அகவிலைப்படி - 01-01-2026 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம்- ஆணைகள்- வெளியிடப்படுகின்றன.

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:-**

அரசாணை (நிலை) எண். 247, நிதி (படிகள்) துறை, நாள். 13.11.2025.

**ஆணை:**

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி, மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது:-

| எந்நாளிலிருந்து வழங்கப்படுகிறது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| (1) | (2) |
| 01-07-2025 | அடிப்படை ஊதியத்தில் 58 சதவீதம் |

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில அரசுப் பணியாளர்களுக்கு 58 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக அகவிலைப்படியை 01-01-2026 முதல் உயர்த்திவழங்கப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், அகவிலைப்படியினை 2 சதவீதம் கூடுதல் உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

| எந்நாளிலிருந்து வழங்கதக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| (1) | (2) |
| 01-01-2026 | அடிப்படை ஊதியத்தில் 60 சதவீதம் |

3. ஜனவரி 2026 முதல் ஏப்ரல் 2026 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்பொது நடைமுறையில் உள்ள பணமில்லாப் பரிவர்த்தனை முறை மின்னனு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால்அது விட்டுவிடப்பட வேண்டும்.

4. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழு நேரப் பணியாளர்களுக்கும், சில்லரைச் செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழு நேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேரப் பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

5. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைகழக மானியக்குழு/ அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுடபப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும் சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் ஊராட்சிச் செயலாளர்கள்/ எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும்.

6. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303, அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

7. மேலே பத்தி 3 இல் ஒப்பளிக்கப்பட்ட திருத்திய அகவிலைப்படி நிலுவைப்பட்டியல் சமர்பிப்பது தொடர்பாக சம்பளம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிட இயக்குநர் (மு.கூ.பொ), கருவூலக் கணக்குத் துறை, சென்னை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இதற்கான பட்டியல்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள்/ சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மு.அ.சித்திக்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல்-தேனி கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு S. செந்தில் குமார், உதவி செயற் பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி S. குருவம்மாள் 23.04.2026 அன்று இயற்கை எய்தினார். இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கடலூர் கிளையின் செயலாளர் பொறியாளர் திரு P. பார்த்திபன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், திருநெல்வேலி - தூத்துக்குடி கிளையின் இணைச் செயலாளர் பொறியாளர் திரு S. சிவராஜன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல் - தேனி கிளை உறுப்பினர் பொறியாளர் திருமதி J. அமுதா, உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், விருதுநகர் கிளை பொருளாளர் பொறியாளர் திரு R. சகாதேவன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.




தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல் - தேனி கிளை உறுப்பினர் பொறியாளர் திரு.A. காளிமுத்து உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் திருT. முரளி, உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



**FINANCE ( ALLOWANCES) DEPARTMENT**

**G.O.(Ms).No. 46, Dated : 20th February 2026.**

***(மாசி-08, திருவள்ளுவர் ஆண்டு 2057)***

**ABSTRACT**

GENERAL PROVIDENT FUND – Withdrawal from the General Provident Fund - Maximum limit - Amendments to rule 15- B of General Provident Fund (Tamil Nadu) Rules- Issued - Notified.

**Read the following:-**

1. G.O. Ms. No.33, Finance (Allowances ) Department, dated 21.01.1992.
2. G.O. Ms. No.381, Finance (Allowances ) Department, dated 30.09.2010.
3. G.O. Ms. No.103, Finance (Allowances ) Department, dated 01.04.2013.
4. From the Accountant General Letter No. PAG (A&E) /EM / VII/ 25 - 26/ TRs-62887, dated 02.02.2026.

**ORDER:**

The following Notification will be published in the Tamil Nadu Government Gazette.

**NOTIFICATION**

In exercise of the power conferred by the proviso to Article 309 of the Constitution of India and of all other powers hereunto enabling the Governor of Tamil Nadu hereby makes the following amendment to the General Provident Fund (Tamil Nadu) Rules.

**AMENDMENTS**

In the Said Rules, in rule 15-B, in sub –rule (1) , for the provisos, the following provisos shall be substituted, namely:-

"Provided that in no case the maximum amount of withdrawal for the purposes specified in clauses (d), (e), (f) and (g) of rule 15 (A) shall exceed Rs. 20,00,000/- (Rupees twenty lakh only) or 75 times of the monthly pay whichever is less:

Provided also that in the case of a subscriber who has availed himself of an advance under the Scheme for the grant of advances for house building purpose, sponsored by the State or the Central Government or the Public or Private Financial Institution, the sum withdrawn under this sub-rule together with the amount of

advance taken under the aforesaid Scheme or the assistance taken from the above said sources shall not exceed Rs. 50,00,000/- (Rupees fifty lakh only)

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T. UDHAYACHANDRAN**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு. C. மார்கண்டன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் சேப்பாக்கம் கட்டட மேற்கூரை புனரமைப்பிற்கு ரூ.30,000/-(முப்பதாயிரம் மட்டும்) நன்கொடை வழங்கியதற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு G. மகேந்திர குமார், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் சேப்பாக்கம் கட்டட மேற்கூரை புனரமைப்பிற்கு ரூ.30,000/-(முப்பதாயிரம் மட்டும்) நன்கொடை வழங்கியதற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு. A. சிவசண்முகம், உதவிசெயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் சேப்பாக்கம் கட்டட மேற்கூரை புனரமைப்பிற்கு ரூ.10,000/-(பத்தாயிரம் மட்டும்) நன்கொடை வழங்கியதற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் செயலாளர் பொறியாளர் திரு. R. பத்மநாபன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் சேப்பாக்கம் கட்டட மேற்கூரை புனரமைப்பிற்கு ரூ.5000/-(ஐந்தாயிரம் மட்டும்) நன்கொடை வழங்கியதற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் இணைச்செயலாளர் பொறியாளர் திரு. D. ஜெயகுரு, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் சேப்பாக்கம் கட்டட மேற்கூரை புனரமைப்பிற்கு ரூ.5000/-(ஐந்தாயிரம் மட்டும்) நன்கொடை வழங்கியதற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## உறுப்பினர்களின் கவனத்திற்கு

புனரமைக்கப்பட்ட சென்னை பொறியியல் இல்லம் உறுப்பினர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே சென்னைக்கு வரும் உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடைய உறவினர்கள் சென்னை பொறியியல் இல்லத்தை பயன்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 258, நீர்வளத் (D2) துறை நாள் 30.04.2026)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | R. வெங்கிடபதி | கண்காணிப்பு பொறியாளர் |
| 2. | R. சகாதேவன் | உதவி செயற்பொறியாளர் |
| 3. | J. அமுதா | உதவி செயற்பொறியாளர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

J. ஜெயகாந்தன்
அரசு செயலாளர்

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 74, பொதுப்பணித் (Estt- 1-2) துறை நாள் 30.04.2026)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | V.S. கிருஷ்ணசாமி | தலைமைப் பொறியாளர் (அயர்பணி) |
| 2. | P. பெரியசாமி | தலைமைப் பொறியாளர் (அயர்பணி) |
| 3. | A. தமிழ்ச்செல்வன் | இணை தலைமைப் பொறியாளர் (மின்) |
| 4. | G. கோமதி | செயற்பொறியாளர் (மின்) |
| 5. | P.L.செல்வராஜ் | உதவி செயற்பொறியாளர் |
| 6. | A.S.M. முத்துசாமி | உதவி செயற்பொறியாளர் |
| 7. | A.காளிமுத்து | உதவி செயற்பொறியாளர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

## இரங்கல்

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கன்னியாகுமரி கிளையின் உறுப்பினர் பொறியாளர் திருமதி U.V. சண்முகஸ்ரீ இளம்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் 18.03.2026 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

“Never stop fighting until you arrive at your destined place - that is, the unique you. Have an aim in life, continuously acquire knowledge, work hard, and have perseverance to realize the great life.”

**- A. P. J. Abdul Kalam**

## 11.03.2026 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 11.03.2026 அன்று மாலை 5.00 மணிக்கு சென்னை சேப்பாக்கம் தமிழ்நாடு பொறியியல் சங்க அலுவலகத்தில் மாநிலத்தலைவர் பொறியாளர் V.பரமசிவம் தலைமையிலும், "சாதனைச்செம்மல்" செயல்தலைவர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத்தலைவர் பொறியாளர் V. பரமசிவம் சங்க நடவடிக்கைகள் பற்றி பேசினார். "சாதனைச்செம்மல்" செயல்தலைவர் பொறியாளர் த. முருகேசன் அவர்கள் சங்கத்தின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.

பொதுச்செயலாளர் பொறியாளர் சி. பன்னீர்செல்வம் அவர்கள் தமது உரையில் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மையச்சங்க பொறுப்பாளர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தார்கள்.

**தீர்மானங்கள் :-**

1. பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத் துறையில் நீண்ட நாட்களாக காலியாக உள்ள இளநிலைப் பொறியாளர் பதவிகளை தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் உடனடியாக நிரப்ப வேண்டும் என்று தீர்மானிக்கப்படுகிறது.

2. தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு சொந்தமான சுண்ணாம்பு குளத்தூரில் உள்ள இடத்தை பாதுகாக்க அடுத்து வரும் மாநில பொதுக்குழு கூட்டத்தில் சொத்து பாதுகாப்பினை கையாளுவதற்கு தனியாக நிர்வாகிகள் குழு அமைக்க தீர்மானிக்கப்படுகிறது.

3. பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை என துறையினை இரண்டாக பிரித்ததனால் நீர்வளத்துறையில் முதுநிலையில் உள்ள மூத்த உதவி பொறியாளர்களுக்கு 'Special" உதவிசெயற்பொறியாளர்களாகவும் மற்றும் முதுநிலையில் உள்ள மூத்த உதவிசெயற்பொறியாளர்களுக்கு 'Special" செயற்பொறியாளராகவும் தரம் உயர்த்தி பணப்பலன்கள் வழங்க கோரி தீர்மானிக்கப்படுகிறது.

4. தமிழ்நாடு பொறியியல் சங்க கட்டிடத்தில் பழுதான மேற்கூரையை அகற்றிவிட்டு புதிதாக மேற்கூரை அமைக்க கிளைச்சங்கங்களின் வாயிலாகவும் மற்றும் பொங்கும்நிதியின் வைப்புநிதியின் வாயிலாகவும் செலவினங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

5. சட்டத்திற்கும், விதிகளுக்கும் புறம்பாக இளநிலைப்பொறியாளர் காலிப்பணியிடங்களை உதவிப் பொறியாளர்களைக் கொண்டு நிரப்பக் கூடாது என்று தமிழக அரசை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.

---

துணிவு இல்லையேல் வாய்மை இல்லை...

வாய்மை இல்லையேல் பிற அறங்களும் இல்லை....

- மகாத்மா காந்தி

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல்- தேனி கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு. M. சென்ராம், உதவி செயற்பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமணத்தை முன்னிட்டு ரூ. 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடை வழங்கியுள்ளார் .

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் தலைவர் மற்றும் சிவகங்கை கிளையின் இணைச் செயலாளர் பொறியாளர் திரு V. பரமசிவம்,உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.2400/- (இரண்டாயிரத்து நானூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கிழக்கு மண்டல செயலாளர் பொறியாளர் திரு R.வேதமூர்த்தி, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1950/- (ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) தஞ்சாவூர் கிளை வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தருமபுரி கிளையின் முன்னாள் தலைவர் பொறியாளர் திரு G. பழனிசாமி, செயற்பொறியாளர் அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து அறுநூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சிவகங்கை கிளையின் முன்னாள் துணைத் தலைவர் பொறியாளர் திரு S. பெருமாள்சாமி, உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து அறுநூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், விருதுநகர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு K. ஜெய்சங்கர், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து அறுநூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் உறுப்பினர் பொறியாளர் திரு A. சிவசண்முகம், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1650/- (ஆயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், திண்டுக்கல்- தேனி கிளையின் முன்னாள் துணைத்தலைவர் பொறியாளர் திரு S. மயில்வாகனன், உதவிசெயற்பொறியாளர் அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ஆயிரத்து அறுநூறு மட்டும்) சங்க வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

உறுப்பினர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஓமாந்தூர் ஸ்ரீ அன்னகாமாட்சி அம்மன் துணை
ஸ்ரீ பிரசன்ன வெங்கடாஜலபதி துணை

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம்.

நிகழும் மங்களகரமான ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 15 ஆம் நாள் **(29-05-2026) வெள்ளிக்கிழமை** சுபயோக சுபதினத்தில் **காலை 6.00- 6.15 மணிக்குள்**

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், கீரம்பூர், தெய்வத்திருவாளர்கள். கீ.இரா. இராமசாமி - ஜெயம் அவர்களின் மகன்வழிப் பேரனும்,வாலிஸ்புரம், தெய்வத்திரு. ரெங்கராஜ்- நலமுடன் பாலசரஸ்வதி அவர்களின் மகள்வழிப் பேரனும், திரு.கீ.இரா.ஜெயராமன்-திருமதி இந்திரா அவர்களின் குமாரன் திருநிறைச்செல்வன்

## Dr. ஜெ. ஆதித்யன், M.S., Ph.D.,

**(Research Fellow, University of Michigan, USA)**

கோவை மாவட்டம், சிங்காநல்லூர் வட்டம், ஒண்டிபுதூர் திரு. கி. கண்ணன்
திருமதி சந்தகுமாரி அவர்களின் குமாரத்தி திருநிறைச்செல்வி

## Dr. க. ஆர்த்தி, M.Tech., Ph.D.,

**(Postdoctoral Researcher, Kansas State University, USA))**

இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம் **ஸ்ரீ கிருஷ்ணன் கோவில், கிழக்கு வாசல், குருவாயூரில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வரவேற்பு:**
30.05.2026 சனிக்கிழமை,
மாலை 6 மணிக்கு மேல்,
மங்களம் வெட்டிங் & கன்வென்ஷன்ஸ்,
நெல்சன் ரோடு,
திருவானைக்கோவில்
திருச்சி - 620 005

***தங்கள் அன்புள்ள,***
கீ.இரா.ஜெயராமன்
உதவி செயற்பொறியாளர் (பணி நிறைவு)
நீர்வளத்துறை, திருச்சி
இந்திரா ஜெயராமன், ஸ்ரீரங்கம்
செல்: 95242 99900, 9790112051
இரா. ஆனந்தகுமார்
இளநிலைப்பொறியாளர்,
சிறப்பு திட்டகோட்டம், புதுக்கோட்டை.
கீதா ஆனந்தகுமார், பெரம்பலூர்

*அழைப்பின் மகிழ்வில்...*
*Dr. ஜெ. சித்தார்த், M.S.,(Gen. Surg.),*
*ஆ. விக்னேஷ், M.Eng., கனடா*
*ஆ. தினேஷ், M. Eng., கனடா*

உ

ஓம் சாந்தி

ஸ்ரீ ஸ்ரீ இருளப்பசாமி, புளு கருப்பசாமி துணை, ஸ்ரீ சங்கிலிராயர், ஸ்ரீ அங்காள ஈஸ்வரி அம்மன் துணை

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம்.

நிகழும் மங்களகரமான ஸ்ரீ பராபவ வருடம் வைகாசி மாதம் 11 ஆம் தேதி **(25-05-2026) திங்கள்கிழமை** தசமி திதியும், உத்திரம் நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் **காலை 9.00 மணிக்குமேல் 10.30 மணிக்குள் கடக** லக்னத்தில்

தேனி, தெய்வத்திருவாளர்கள். S.மாணிக்கம் செட்டியார்- M. மாரியம்மாள் இவர்களது மகன்வழிப் பேரனும், குன்னூர், தெய்வத்திருவாளர்கள் K. இராமசாமி செட்டியார் - R. பொன்னுத்தாய் இவர்களது மகள்வழிப் பேரனும், திரு. M. சென்ராம் - R. முருகலட்சுமி (எ) சுஜாதா இவர்களது குமாரனுமான திருநிறைச்செல்வன்

**Er. S. மது M.E., (Structure)**

**(Assistant Engineer, PWD)**

தேனி - அன்னஞ்சி, தெய்வத்திரு. S. ரத்தினம் செட்டியார் - சொர்ணம் லட்சுமி அம்மாள் இவர்களது மகன்வழிப் பேத்தியும், காமாட்சிபுரம், R.கந்தசாமி செட்டியார் - கமலா இவர்களது மகள்வழிப் பேத்தியும், திரு. R. சரவணன் - மலர்விழி இவர்களது குமாரத்தியுமான திருவளர்ச்செல்வி

**Dr.S. சிவசங்கரி, M.B.B.S.,**

**(அரசு மருத்துவர்)**

இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம் **ஆண்டிபட்டி, வைகை அணை ரோட்டில் அமைந்துள்ள வேல்மணி திருமண மஹாலில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

***தங்கள் அன்புள்ள,***

*M.ராஜாராம்- R. மலர்விழி*

*(Sr. Deputy Registrar Rtd, MKU) தேனி*

*M. சென்ராம் M.E.,(Struc) - R. முருகலட்சுமி (எ) சுஜாதா M.A.,B.Ed.,*

*(AEE, PWD WRD Rtd) (அரசு பள்ளி ஆசிரியை)*

*சகோதரன் : தெய்வத்திரு.S. மதன் ஆண்டிபட்டி*

*M. மேகன்ராம் D.C.E., - R. கலாநிதி B.Sc., ஆசிரியை திருப்பூர்.*

*செல்: 94880 10558*

ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை
அமைச்சராக பொறுப்பேற்றுள்ள
மாண்புமிகு N.ஆனந்த் அவர்களுக்கு
நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்
கொள்கிறோம்.



Under Postal Regd No. TN/CH/(C)/591/2025-2027 & WPP LICENCE No.TN/PMG(CCR)/WPP-664/2025-2027,
Date of Publiciation 1st Week of Every Month. R.N.I. No.R.33590/1978. Posted on 5-11 of Every Month

MAY 2026

**தமிழ்நாடு பொறியியல் சங்கம், தெற்கு மண்டலச் செயலாளர் பொறியாளர் திரு M.B. தங்கஜெய்லானி, உதவி செயற்பொறியாளர் அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு சங்க பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.**



தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,